1974 ஏப்ரல் 9]

திரு. ஏ. ஆர். சுப்பையா : 24 கிலோமீட்டர் என்பது பெயரளவில்தான் இருக்கிறது. திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து, ஆலங்குளம் வரை பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. ரெக்கார்டில் டவுனிலிருந்து, ஆலங்குளத்திற்கு விடப் பட்டிருப்பதாக இருக்கிறது. இந்தச் சம்பிரதாயத்தைக் கவனிப்பதைவிட, சர்க்கார் தலையிட்டு, முக்கியமான இடங்களுக்குப் பஸ் விட வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஸ்பெசிஃபிக்காகக் கேட்கும்போது, எங்களுடைய ரெக்கார்டில் டவுனிலிருந்து விடப்படுவதாகத்தான் இருக்கிறது. ஆனால் ஜங்ஷனிலிருந்து போகிறது, நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரையில், விதிமுறையைக் கொஞ்சம் தளர்த்தி, சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது ஒரு பிரச்னை. நகரத்திலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். நகர பஸ் ஸ்டாண்டிலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். ஆனால், பொதுவாக, வழித்தடங்கள் என்று சொல்லும்போது, பேருந்து நிலையங்களுக்கு இடையே உள்ள தூரத்தை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நகரங்களிலுள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கு நகரத்திற்கு வெளியே பரவலாகச் செல்ல வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றிருக்கிறது. 24 கிலோமீட்டர் என்று வைத்திருப்பது அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, 24 கிலோமீட்டரை, 40 கிலோமீட்டராக உயர்த்தவாவது அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவுமில்லை.

திருவண்ணாமலை-சேலம் பேருந்து வழித்தடம்

* 800. **வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தாணிப்பாடி, நரிப்பள்ளி, அரூர் வழியாக சேலம் செல்ல அரசு பஸ் ஒன்று விடும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

[1974 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு தனிப்பாடி அரூர் வழியாக புதிதாக ஒரு பேருந்து விடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவர்வர்களே, இந்த மாதிரி வழித்தடங்கள் தமிழ் நாட்டிலே எவ்வளவு இருக்கின்றன? அது ஏதாவது சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அவைகளுக்கெல்லாம் பஸ் விடுவதற்கு என்ன தடங்கலிருக்கிறது என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கிட்டத்தட்ட 250 வழித்தடங்களில் 300 பேருந்துகளைக்கொண்டு நாம் இயக்கிவருகின்றோம். நீண்ட தூரப் பேருந்துகள் நிறைய வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. ஆனால், பேருந்துகள் கிடைப்பதில் இருக்கிற கஷ்டங்கள் காரணமாக அவைகளை அதிகப்படுத்த இயலாத நிலையிலிருந்து கொண்டிருக்கின்றோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சேலம் ஒரு மாவட்டத்தின் தலைநகராக இருக்கிற காரணத்தாலே, திருவண்ணாமலையிலிருந்து பல இடங்களுக்குப் பேருந்து வசதிகள் இருந்தாலும், சேலம் போகவேண்டுமென்றால், இரண்டு மூன்று வழித்தடங்கல் வழியாகப் போக வேண்டியிருக்கிறது, சுற்றிச் சுற்றிப் போக வேண்டியிருக்கிறது, 3, 4 பஸ்கள் ஏறவேண்டியிருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலையிலிருந்து சேலம் போவதற்கு நிறைய மக்கள் போக வேண்டியிருக்கிற காரணத்தாலே—இப்பொழுதில்லாவிட்டாலும் கொஞ்சம் நாள் கழித்தாகிலும் நமது அரசாங்கம் பஸ் விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: காலம் கனியும்வரை காத்திருக்கத்தான்வேண்டும்.

Transport Ministers' Conference.

*801 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any conference of Southern States Transport Ministers took place recently in Coimbatore; and

(b) if so, the decisions arrived at?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.